திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனைமலை ஒன்றியத்திற்குட்பட்டிருக்கக்கூடிய மடத்துக்குளம் கிராமத்தில் சூறைக்காற்றினால் தென்னை மற்றும் இருக்கக்கூடிய விவசாயப் பயிர்கள் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், நீங்கள் இந்தப் பிரச்சினை குறித்து இன்றைக்குத்தான் என்னுடைய அறைக்கு வந்து அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அது அரசினுடைய நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. பதில் வந்தவுடன், அதுகுறித்து நான் பரிசீலித்து, பிறகு எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள், நீங்கள் பேசுங்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அரசுப் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய பணியாளர்கள் 22 நாட்களாக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுகுறித்து ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்போது நீங்கள் அவையில் இருந்து, அதைக் கேட்டீர்கள் அல்லவா? (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

(இ) பன்றிக் காய்ச்சல் நோய் தமிழகத்தில் பரவுவதைத் தடுத்தல்

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பன்றிக் காய்ச்சல் நோய் எப்படியெல்லாம் பரவிக் கொண்டிருக்கிறது என்பதையெல்லாம், ஏற்கெனவே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, ஏற்கெனவே இதுகுறித்து எல்லா உறுப்பினர்களும் விரிவாகப் பேசி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குத் தெளிவான பதிலை அளித்திருக்கின்றார்கள். எனவே, இதுகுறித்து பயப்படத் தேவையில்லை. எனவே, தயவு செய்து அமருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கும் சேர்த்து பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பன்றிக் காய்ச்சல் குறித்து பதில் வைத்திருக்கிறீர்களா? (குறுக்கீடு)*

உங்களுடைய பதிலிலே அதையும் சேர்த்துச் சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

திரு. எல். வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட புளியங்கோட்டை கிராமத்திலே யானை மிதித்து, திரு. சடையன் என்பவரின் மகன் கோவிந்தன் இறந்திருக்கிறார். அதேபோன்றதொரு நிகழ்வு செங்கம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *காலையில் என்னுடைய அறைக்கு வந்து இந்தப் பிரச்சினை குறித்து அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். எனக்கு அது நன்றாகத் தெரியும். அதைத் துறைக்கு அனுப்பியிருக்கிறோம். அதற்குப் பதில் வந்தவுடன், அதை எடுத்துக் கொள்வதுபற்றிப் பரிசீலிக்கப்படும். (குறுக்கீடு) அரசு தலைமைக் கொறடா, இதே பிரச்சினை குறித்துதானே நீங்களும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள்? (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள்.*

திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் வட்டத்தில், கல்வராயன் மலையினுடைய அடிவாரத்தில், கோவிந்தன் என்பவர் யானையால் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார். அந்த நிகழ்வினை அரசினுடைய கவனத்திற்குத் தங்கள் வாயிலாகக் கொண்டு வர விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுகுறித்து இன்றைக்குத்தான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு அரசிடமிருந்து பதில் வரட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டீஸ்கர் மாநிலத்திலே கலெக்டர் அவர்கள் கடத்தப்பட்டது குறித்து அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நேற்றே அதற்குப் பதில் கொடுத்தாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*